உ

சிவமயம்

நாற்பத்து நான்காவது,

# செந்தூர முந்நூறுக்கு

# சூத்திரம் — 36

செம்பு வெள்ளை

பாரப்பா செம்பினிட வெள்ளைக்கேளு
பரிவான தாம்பிரத்தைக் குகையில்வைத்து
சேரப்பா திருளுவ பலமேபோட
சேர்ந்துருகும்போதினிலே மருந்துகேளு
காரப்பா வுண்டமது பலமேரெண்டு
கட்டுநவாச்சாரமது பலமிரண்டு
சீரப்பா கல்வத்திற் றானதாக்கிச்
சிறந்தபொடிமேற்கார மதைதான்போடே. 1

போட்டதனைபொடித்துநன்றாய் பொடியைத்தூவிப்
புகழானசெம்பினிட ஊறல்போகும்
தாட்டிகமாய்ப்பின்னெடுத்து வங்கங்குத்தித்
தனியோட்டி லூதிவிடு களங்குபோலாம்

மாட்டிதனைக்குகையிலொரு புடம்போடப்பா
வாகாகக்கண்விட்டு வுருக்கும்போது
நாட்டியதோர்சுன்னத்திம் றுளசுத்தைவைத்து
நலமாகப்பதினைந்து சாமம்நீற்றே. 2

நீற்றினபின்வாங்கியதை யெடுத்துக்கொண்டு
நிறுத்திடுவாய்பலமொன்று காரங்கால்தான்
போட்டுபின்னைபழச்சாற்று லரைத்துக்கொண்டு
புகழாகப்பயறளவு வுண்டைசெய்து
சேர்த்தியாய்க்கொடுக்கையிலே சத்துவாங்கு
நோனசெம்பதுதான் வெங்கலம்போலாகும்
மாற்றிபினதயதைப்பலந்தான் கல்வத்திட்டு
மாற்றியேபொடித்திடுவாய் தூளாய்க்கேளே. 3

காணப்பாயிந்திடைக்கு வீரம்போடு
கடுகவேசாமமொன்று அரைத்தாயானால்
தோணப்பாசலமுண்டா மெழுகுபோலாம்
துடியானகுருமைப் பலமும்போடு
ஆணப்பாசெம்பிடைக்குச் சூடன்போடு
அரைக்கும்போதினில் வெள்ளையாக்கால்போ
நீணப்பாசூடனிடை பூரமும்போடு [டு
நிலைக்கவேஅரைத்தின்றாய் வில்லைதட்டே. 4

வில்லைதனையுலர்த்தியபின் குகைக்குள்வைத்து
மேல்மூடிச்சீலைசெய்து புடத்திற்போடு

வில்லையது கெசபுடத்தில் வெள்ளையாகும்
விளங்கியதோர் தாம்பிரத்தின் வெள்ளை ஐயா
வெள்ளையது பதனமாய் வைத்துக்கொண்டால்
மோகமொடு பதினெட்டுக்குஷ்டந்தீரும்
வில்லையினால்வாய் வல்லா மொழிந்துபோகும்
விளங்கியதோர் பித்தமெல்லாம் பறந்துபோமே.

பறந்துபோமனுபான மறிந்துகொண்டால்
பற்பத்திற்குறையொன்று மில்லையப்பா
இறந்துபோம்வியாதியெல்லா மென்னசொல்வே
னெடுத்திட்டசெம்பினிட வெள்ளைவேகம்
கறந்தபால் சோற்றின்மேல் குடிக்கச்சொல்லு
கருப்புட்டிபோட்டங்கே காச்சிக்கொண்டு
அறைந்தேனே கருமத்துக் காகவல்லோ
அப்பனே நாகத்தின் வெள்ளைக்கேளே. 6

நாகவெள்ளை

கேளப்பா சன்னமொடு சாரங்கூட்டி
கெடியாக அமுரிவிட்டுத் தண்ணீராக்கி
வாளப்பா நாலுபல மதற்குள்ளேதான்
மைந்தனே நாகமதை யுருக்கிச்சாய்ப்பாய்
வேளப்பா வெண்டெடுத்து விசையேசாய்ப்பாய்
மீறுகின்ற நாகத்தி னூறல்போமே
வாளப்பா பின்பெடுத்துப் பழச்சாற்றிற்சாய்ப்பாய்
மைந்தனே நாகமது சுத்தியாச்சே. 7

ஆசப்பாஎரைந்து தாமேசாய்ப்பாய்
அப்பனே குகையிலிருக்கிப்பின்பு
வாச்சப்பாசுத்திசெய்து தாளகந்தான்
வரிசையாய்க்கனத்திகொண்டு காரங்கால்தான்
நீச்சப்பாபழச்சாற்றி லரைத்துக்கொண்டு
நேசமுடன் குன்றியிடை யுண்டைசெய்து
காச்சப்பாரவிமுகத்தி லுலர்த்தபின்பு
கனக்கவேகாரமொரு பலத்திறுக்கே. 8

தாக்கப்பாதாளகந்தி யுண்டைசெய்து
தயவாகவொவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு
வாக்கப்பாநாகமது தெரிக்கும்பாரு
மைந்தனேயிந்நாகம் பலமொன்று
நீக்கப்பாகல்வத்திற் பொடிக்கத்தானாம்
நோயாகவீரத்திற கால்தான்போடு
தாக்கப்பாசூதமதிற் கால்தான்போடு
தூடியானவுவருப்பு அரைக்கால்போடே. 9

போடப்பாவாச்சார மரைக்கால்போடு
புகழ்ந்தமருந்திடைக்குச் சூடன்போடு
ஆடப்பாவெருக்கம்பால் வெண்கருவும்விட்டு
யரைத்திடுவாய் பிருசாமம்வில்லைதட்டு
சூடப்பாவுலர்த்தபின்பு சன்னச்சீலை
சுற்றியேசுண்ணாம்புக் குள்ளேவைத்து

சாடப்பாகெசபுடமாய்த் தீயைப்போடு
தவளநிறமாகவரும் வெள்ளையாமே. 10

வெள்ளையாய்நாகமது விரிந்ததப்பா
வியாதிக்குவனுபான மறிந்துபோடு
பிள்ளையார்போதென்றும் குன்றியிடையேபோடு
போனவாதமென்ற வெண்பதுந்தான்
கொள்ளையடாபித்தமது நாற்பதும்போம்
கூறுவேன்சேத்துமங்கள் தொண்ணூற்றாறு
கள்ளரைப்போல்பயந்தோடும் காகங்கண்டால்
கருத்துள்ளவாதிகளே கண்டீரே. 11

## அயலோக வெள்ளை

கண்டாயேயின்னமொரு வயித்தியந்தான்
கண்கெட்டவாதிகளே கருக்கேளு
உண்டானசேதியிது மகத்தாம்பற்ப
முத்தமனே பூநீறுபலந்தானென்று
தண்டானசாரமது பலந்தானென்று
சாரமொன்றரைத்ததனைப் பீங்கானிலிட்டு
பண்டான அமுரியுப்புக் கால்பலமேபோடு
பதறாமல்பனியில்வைக்கச் செயநீராமே. 12

செயநீரிலரைத்திடவே மருந்துகேளு
இடமாகக்காரமொன்று சாரமொன்று

செயநீரில் காரமொன்று வீரமொன்று
செப்புகிறேன் கூடவொன்று ஐந்தாங்கூட்டி
செயநீரிலரைத்திடவே சாமமொன்று
திரண்டல்லோமெழுகாகு மூன்றுபங்காய்
தயவான அரப்பொடியைப்பழச் சாற்றிற்போட்டுத்
தனை யெடுப்பாய்நாலாநாள் கழுவிவாங்கே. 13

வாங்கியித்தஅரப்பொடிதா னொன்றுங்கூட்டி
மைமந்தனை பங்குமொரு மருந்துகூட்டி
ஓங்கியேபிசைந்துவொன்றாய்க் குகைக்குள்ளிட்டு
வுத்தமனே மேல்மூடிச் சீலைசெய்து
நீங்காமற்குகையடுக்க னன்றாயூது
நிலைத்துவொருமணியாக நிற்கும்பாரு
சாங்கமாய்க்கொருங்குமிந்த மணிதனைப்பா
தயமாகயின்னமொரு பங்குகூட்டே. 14

கூட்டியேயூதிடுவாய் மறுக்காலுந்தான்
குன்றுமல்லைகமுறையால் மூன்றுபங்குமூது
நாட்டியேபின்பெடுத்து வுருக்கும்போது
நலமான தங்கம்போல் கண்விட்டாடுந்
தாட்டிகமாயிம்மணியைக் கல்வத்திலிட்டுச்
சவ்வீரஞ்சரியிடையா யரைக்கும்போது
ஊட்டிடுவாய்கண்டிடைக்குப் பாதிசூத
முறைவான சாரங்கால் கூடவென்றே.

கூடெறுமருந்தைத்து முறவாயாட்டச்
சமமானவெள்ளையுர மொன்றுபோடு
நாடவேமெழுகாமே வில்லைதட்டு
ரவிமுகத்திலுணர்ந்தபின்பு சுண்ணச்சீலை
ஊடவேசுற்றியபின் சுண்ணம்பில்லைவைத்து
வுத்தமனேகஜபுடமாய்க் கனலைமூட்டு
வாடவேவேண்டாங்காண் வைத்திபோமே
மகத்தானதவளநிற மாகும்பாரே. 16

பாரப்பாலோகவெள்ளை வேகமெத்த
பாய்ச்சலாமனுபான மறிந்துபோடு
சேரப்பாபாண்டுவகை யெல்லாம்போமே
செகமதியலே னுமென்ற தெல்லாம்போமே
காமப்பாவாயுவென்ற தெல்லாம்போமே
காமாலைசோகையொடு ஈளைபோமே
வேமப்பாபித்தத்தின் கோபம்போமே
விளங்குகின்றமேசத்துமங்கள் பறந்துபோமே.

காந்தவெள்ளை-அயலோகச்செந்தூரம்

பறந்துவிடுங்காந்தத்தை யிப்படியேசெய்யிற்
பரிகாரகாந்தமது வெள்ளையாமே
இறந்துவிடுநோய்களெல்லா மெங்கேபோமே
யெடுத்திட்டகாந்தவெள்ளை வேகமெத்த

மறந்துநீ போகாதே கைமுறை நானப்பா
வளமான லோகச் செந்தூரங் கேளு
அறந்தழைக்கச் சுத்தி செய்த லோகந்தன்னை
யப்பனே பலமொன்று கல்வத்தாட்டே. 18

ஆட்டுதற்கே சுத்தி செய்த கெந்திதன்னை
யப்பனே பலமொன்று கூடப்போடு
ஆட்டுதற்கே பழச்சாற்றுற் சாமமொன்று
வரைந்திடுவாய் வில்லைதட்டி யுலரப்போட்டு
ஆட்டுதற்கே முப்பதெருக் குள்ளேபோடு
அயலோகச் செந்தூர மாமே கண்டீர்
ஆட்டுதற்கே செந்தூரம் கண்டிடைக்கு
வப்பனே கெந்தகத்தைத் தாக்குதாக்கே. 19

தாக்கியே பழச்சாற்றுற் சாமமொன்று
துவளவரை பூநீரும் காணுங்கூட்டு
தாக்கியே யரைத்தபின்பு வில்லைசெய்து
சாதகமாயுலர்த்தபின்பு புடத்தைப்போடு
வாக்கிலே செந்தூர லோகமப்பா
மைந்தனே யரைப்பணந்தா னனுபானத்தில்
ஆக்கியே யெந்த வியாதிக்குந்தான்
அனுபானமறிந்துகொண்டு லோகம்போடே. 20

## அயலோகச் செந்தூரம்

### வேறு விதம்

போடவேவாய்வுபத்திர பித்தம்போகும்
புகழாகசிலேற்பனத்தால் வந்தநோவு
ஊடவேசெய்யவிது வெளிதாமப்பா
வுரைப்பார்கள் நாதாக்கள் கருணைதன்று
நாடவேலோகச்செந் தூரந்தன்னில்
நலமாகவொருகழஞ்சு யெடுத்துக்கொண்டு
நீடவேலிங்கமொரு கழஞ்சுகூட்டி
நிலையானவீரமொரு காலுங்கூட்டே. 21

கூட்டியேபழச்சாற்றி லரைக்கும்போது
கொடியதொருகெந்தகந்தான் கழஞ்சுபோடு
நாட்டியேசாமமொன்று யரைப்பாயப்பா
நலமாகவில்லைசெய்து யுலர்த்திக்கொண்டு
வாட்டவேயிரண்டெருவிற் புடத்தைப்போடு
வளமாகவூறினபின் னெடுத்துப்பாரு
காட்டிலேயிருந்தசித்தர் மெய்ப்பாரப்பா
கனத்ததொருசெந்தூரங் கண்கொள்ளாதே. 22

கொள்ளாதேசெந்தூரந் தனக்குப்பாதி
கூட்டுவாய்லிங்கமதை முலைப்பாலாலே
விள்ளாமலொருசாம மரைத்துப்பின்பு
விரல்நீளமுண்டைசெய்து வுலர்த்திப்போடு

தள்ளாதேதசன் னுவகை யெல்லாம்போமே
தாதுவிர்த்திபுண்டாமே சாதிலிங்க
முள்ளபடிவாதிகளே சொல்லக்கேளு
வுதரத்தில்வாதபித்த மொழிந்துபோமே. 23

## காந்தகச் செந்தூரம்

ஒழிந்துபோங்காந்தத்தை யிப்படியேசெய்து
வொப்பார்சொல் லுலகத்தி லவனேயீசன்
ஒழிந்துபோங்காந்தமே செந்தூரமாகி
லுத்தமனே சாதிலிங்க மொக்கச்சேரில்
ஒழிந்துபோம்பாண்டு காமாலைரோக
முள்மூலம்புறமூல மொழிந்துபோமே
ஒழிந்துபோம்வாதபித்த சிலேர்பனந்தா
னுயர்த்தியப்பாகாந்தத்தின் செப்புத்தானே. 24

## எமவெள்ளை

தானென்றயேமமது வெள்ளையாகச்
சாற்றுகிறேன் றங்கமொரு பலத்தகட்டில்
வேனென்றநாகத்தின் வெள்ளைதானும்
விளங்கவேகாற்பலந்தா னிருத்துக்கொண்டு
வானென்றவீரமொரு கழஞ்சுகூட்டு
மைந்தனே புனுகுமரைக் கழஞ்சிகூட்டி
கானென்றவெண்கருவா லரைத்துக்கொண்டு
கனக்கவே பூசிடுவாய் தகட்டின்மேலே. 25

மேலிட்டமருந்துள்ளந் தங்கந்தன்னை
        விருப்பமாயண்டநீர் கீழ்மேலிட்டு
பாலிட்டவெள்ளையைப்போல் தங்கம்நீறும்
        பரிவாககெசபுடந்தான் தீயைமூட்டு
மேலிட்டதங்கமது நெருங்கிநிற்கும்
        மேன்மாக்கள்கல்வத்தி லரைக்கத்தூளாம்
மாவிட்டத்தங்கத்துள் தன்னிற்பாதி
        மாட்டுவாய்வீரமது பூரங்காலே. 26

பூரத்தினிடையோடு புனுகுதன்னை
        புகழாகவிவ்வளவும் புனுகுவீதம்
பூரத்தினிடையோடு சூதந்தன்னை
        புகழாகவிவ்வளவுங் கூட்டியாட்டு
பூரத்தால்தங்கமது வெள்ளையாமே
        வீணல்லகெசபுடலத்தில் போடுபோடு
சீரொத்தவண்டநீர் கீழ்மேலிட்டு
        இப்பொடுதங்கமது தவளமாமே. 27

தவளமென்றியமத்திற் கரியாய்லிங்கஞ்
        சமரித்தாமூலைப்பாலா லரைத்துக்கொண்டு
தவளமாம்வில்லைசெய்து வுலரப்போடு
        சாதகமாயோரெருவிற் புடமுந்தீர்ந்தால்

தவளமென்றபரியங்கே செந்தூரமாமே
சன்னியென்றமூலமெல்லாம் பறந்துபோமே
தவளமென்றதங்கத்தின் செந்தூரத்தைச்
சாதகமாய்வாதிகளே செய்துபாரே. 28

பாரையாசந்திரோதயந்தானிந்த
பாரில்வெள்ளிலிங்கத்தைச் சேர்ந்தபோதே
பாரையாபூபதிக ளிதற்குமீடா
பவளசெந்தூரவகை யிதற்குமீடா
பாரையாயிதையெடுத்து வெள்ளிச்செம்பில்
பத்திலொன்றுகொடுத்துப்பாரேழுமாற்றும்
பாரையாகுன்றியிடை யனுபானத்தில்
பண்பாகக்கொடுக்கநோய் பறந்துபோமே. 29

## பூபதி

போமடாசடலத்தில் நோய்களெல்லாம்
பூபதன்மருந்தொன்று சொல்லக்கேளு
நாமடாவொழிந்தரியோம் தங்கவெள்ளி
நாகவெள்ளைலோகவெள்ளை காந்தவெள்ளை
தாமடாசெம்புவெள்ளை யைந்துமொய்ச்சச்
சரியடையாய்க்கழஞ்சிரண்டு வீதந்தூக்கி

காமப்பால்விட்டரைப்பாய்க் கழஞ்சுபத்து
காட்டப்பாயரைக்கையிலே முத்துப்பாடே. 30

போட்டாவயிரமொடு பவளம்போடு
புட்பராகம்போடு பச்சைபோடு
நாமடாசிவந்தமணி ரத்தினம்போடு
நலமாகவகையொன்றுக் கரைக்கழஞ்சு
தேட்டாகெந்தகமோ கழஞ்சாறு
திறமானலிங்கமது கழஞ்சுயெட்டு
ஊட்டாசூதமது கழஞ்சுயெட்டு
வுத்தமனே தாளகந்தான் கழஞ்சியொன்றே. 31

என்றிடுவாய்மனோசிலைதான் வெள்ளையொன்று
வுறவானதுருசொன்று மொன்றதாகும்
நன்றெனவேசாரமொன்று பூரமொன்று
நலமானவீரமொன்று பூரமொன்று
சென்றதொருபொற்றலையின் சாற்றாலாட்டி
திறமாகச்சாமமொன்றி லரைத்தபின்பு
துன்றிடவேயுமுரிவிட்டுச் சாமமொன்று
சுருக்காகச்சம்பழச்சார் சாமமொன்றே. 32

சாமமொன்றரைத்திடுவா யுப்புநீரால்
சாதகமாயரைத்தபின்பு வில்லைசெய்து

நாமமென்றபுதுக்கலசத் துள்ளேவைத்து
நலமாகமேல்மூடிச் சீலைசெய்து
ஓமமென்றஐம்பதெருப் புடத்திற்போடு
வொன்றுமங்கேபுகையாமற் கட்டிநீருஞ்
சேமமென்றபுடமாறி யெடுத்துப்பாரு
செந்தூரமருணநிற மாகும்பாரே. 33

பாருநீசெந்தூரக் கண்டிடைக்குப்
பாதிலிங்கக்கட்டி மூலைப் பாலாலாட்டி
பாருநீவிரல்நீளங் கம்பிசெய்து
பரிவாகவுலர்த்தியதைப் பதனம்பண்ணு
காருநீகுருபதத்தை மேலும்பாருங்
கயிலாசவயிரனைப் பூசைபண்ணு
சேருநீதேவியைப் பூசைசெய்து
சேர்க்குமிந்தபூபதிக்குச் சிவமும்பண்ணே. 34

சிவமானபூபதியை யனுபானத்தில்
திரமாகயரிசியிடை கொடுத்தாற்கேளு
சதமாகப்போனாலும் தாதுவுண்டாந்
சாதுரியப்பிராணன்வரும் விழித்துப்பார்ப்பான்
அமாவனபிரமலப் பவ்வளவேயாகி
வாசித்துப்பேசிவிட்டு மரணமாவான்

தவமான பூடதியைச் சொன்னேன்சொன்னேன்
சாதிக்கும்வயித்தியஞ்செய் தர்மமாமே. 35

ஆமடாயிந்திடவே வயித்தியம்பாரு
வஷ்டதிசைவாக்கவுன்னை வாழ்த்தும்லோகம்
நாமடாவயித்தியத்தில் மருந்தெல்லாந்தான்
நலமாகக்குறுக்கிவைத்தேன் முப்பத்தாறில்
வாமடாயிந்தமருந் தெல்லாம்வாய்த்தால்
வயித்தியன்பேருனைக்கையிலேநோய்களெல்லாந்
தாமடாயெட்டிரண்டு மிருபத்தஞ்சுந்
தடையறவேஅருணை சித்தியாமே. 36

அகஸ்தியர் செந்தூரசூத்திரம் - 36

முற்றிற்று.